1970 மார்ச் 25]

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, விருதுநகரில் பள்ளிகளில் மதிய உணவுக்காகப் போடப்பட்ட அரிசி நிறுத்தப் பட்டதா? அந்தக் குறிப்பிட்ட மாதத்தில் இல்லாமல் போனாலும், அதற்கு முன்னாலாவது அல்லது பின்னாலாவது போடப்பட வில்லையா? ஆம் என்றால் என்ன காரணம்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவலின்படி ஆகஸ்ட் மாதத்தில் 75 குவிண்டால் அரிசி அந்த ஊராட்சிமன்றங்களுக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. மற்ற விவரம் என்னிடத்தில் தற்போது இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

பால்பொடி தயாரிப்பு

*543 வினா—**திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பால்பொடி (Milk Powder) தயார் செய்யும் தொழிற் சாலை ஒன்று மதுரை பால் பண்ணையில் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:

ஆம்.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, பால்பவுடர் தொழிற்சாலையை அமைக்கப்போவது சர்க்கார் துறையிலா அல்லது தனியார் துறையிலா? இதற்கான கெபாசிட்டி என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, சர்க்கார்தான் தொடங்க இருக்கிறது. இதற்கு மொத்தம் 21 லட்சம் ரூபாய் செலவாகும்.

Firing of pellets near Puduchattiram

*529 *Q.*—THIRU N. S. V. CHITHAN :
THIRU R. KARUPPIAH : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Deputy Inspector-General of Police, C.I.D., enquired into the firing of pellets near Puduchattiram about 29th October 1969; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:

(அ) ஆம்.

(இ) முயல் வேட்டையாடிப் பழக்கப்பட்ட அப்பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர், இந்த நிகழ்ச்சிக்குக் காரணமாயிருந்தார் என்று புலனாய்விலிருந்து தெரியவந்தது. அவர், ஒரு முயலைக் குறிவைத்துக் கொண்டிருந்தபோது, திருச்சிராப்பள்ளி செல்லும் 153 எண் விரைவு ரயில் வண்டி அவ்வழியைக் கடந்து சென்றது.

எஸ்.பி.எம்.எல். துப்பாக்கியிலிருந்து வெளிவந்த ரவைக்குண்டுகள் ரயில் வண்டியையும் அதிலிருந்த ரயில் பணியாளர்களேயும் தாக்கின. இந்தச் துப்பாக்கிச் சூட்டில் எந்தவிதமான உள் நோக்கமும் இல்லை. குற்றவாளி துப்பாக்கியைக் கவனக்குறைவாகப் பயன்படுத்தியதற்காக பறங்கிப்பேட்டை குற்றத்துறைத் துணை நீதிபதி அவருக்கு ரூ. 50 அபராதம் விதித்தார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் எத்தனை பேர் காயம் பட்டார்கள்? அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது துப்பாக்கிப் பிரயோகம் அல்ல. மூயலுக்கு குறி வைத்தார், அது ரயிலுக்குப் போனது. இதனால் ரயில் டிரைவருக்கும் பயர்மேன் இரண்டு பேர்களுக்கும் சிறு காயம் ஏற்பட்டது. அவர்களுக்கு நஷ்ட ஈடு எதுவும் தரப்படவில்லை.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, இது போன்ற நிகழ்ச்சிகள் இனிமேல் ஏற்படாமலிருப்பதற்காக அரசு முன் ஏற்பாடுகள் ஏதாவது செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, துப்பாக்கி லைசென்ஸ் பெற்றிருப்பவர்கள் ஒழுங்காகக் குறி பார்ப்பதுதான் தக்க ஏற்பாடு.

Betting on New York Cotton

* 530 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state whether any special drive to check betting on New York Cotton is under taken by the Madras City Police?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

ஆம்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, நியூ யார்க் பருத்தியின்பேரால் நடத்தப்படும் சூதாட்டத்தினால் பல பேர்கள் கெட்டுப் போய்விட்டார்கள். ஆகையால் இதை வன்மையாகத் தடுப்பதற்கு அதிகமான கவனத்தை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதற்கு காவல் துறையில் தனிப்பிரிவுகள் அமைக்கப்பட்டு இந்தச் சூதாட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்றுதான் முன்பு முயற்சிகள் எடுக்கப்பட்டன. கலைக்கப்பட்ட தனிப் பிரிவை மீண்டும் ஏற்படுத்துவதன் அடிப்படையிலேயும், மீண்டும் விழிப்பாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலேயும் போலீஸ் கமிஷனர் அறிவுறுத்தப்பட்டு, அவரும் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.